## ஜனவரி - 3

**"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்." - 1தெச 5:17**

ஜெபத்தில் நமக்குரிய தெளிவையும் பிடிவாதத்தையும் குறித்து நம்முடைய இயல்பான உகந்த மனோநிலை எதுவாயிருந்தாலும் வேதவாக்கியங்களிலிருந்து நம்முடைய போதகத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய இயல்பான சார்புகளின் மேல் வெற்றிகொண்டு "சிறு பிள்ளைகளைப் போலவும்," பிரியமான பிள்ளைகளைப் போலவும் நம்முடைய கருத்துக்களையும் நடக்கையையும் பரத்திலிருந்து வருகிற போதனைக்கு ஒவ்வச்செய்ய வேண்டும். ஆகையால், நாம் எல்லோரும் இந்த வார்த்தைகளை ஞாபகப்படுத்துவோமாக. "கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்ளுவீர்கள்" (யோவா 16: 24) அவைகளைக் கேட்கிற தன்னுடைய கீழ்ப்படிதலுள்ள, உண்மையுள்ள பிள்ளைகளுக்காக பரமபிதா பெருக்கமான கிருபைகளையும் ஆசீர்வாதங்களையும் பராமரிப்புக்களையும் பொக்கிஷமாக வைத்திருக்கிறார். **- Z '96, 162 (R 2004).**

கர்த்தருடைய ஜனங்கள் எப்பொழுதும் சோர்ந்து போகாமல் ஜெபம் செய்ய வேண்டும். வெகு நாட்களாகத் தாமதப்படுத்தப்பட்ட ஜெபத்துக்குரிய உத்தரவு மிகவும் மதிப்பிடத்தக்க ஆசிர்வாதமாகும். ஆகையால், பிதாவினுடைய தயவுக்காகத் தொடர்ந்து நாடி ஜெபிப்போமானால், அப்படி செய்வது நம்முடைய ஆவிக்குரிய தன்மை ஆழ்ந்து பக்குவமடைவதிலும் நம்முடைய பரிசுத்தமான விருப்பங்களை நாம் அடைவதிலும் பலனடையும். **-P '34, 189.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**1பேது 4:7; லூக் 2:37; 11:5-13; 21:36; ரோம 12:12; எபே 1:15,16; 6:18; பிலி 4:6,7; கொலோ 1:9; 4:2; சங் 5:1-3; 42:8; 109:4; 116:2; தானி 6:10; அப் 6:4;10:2,9; ரோம 1:9; 1தெச 3:10; 1தீமோ 5:5; 2தீமோ 1:3.**

**கோபுர வாசிப்பு : Z '15, 182 (R 5707).**

**வினாக்கள் : இடைவிடா ஜெபத்தின் சம்பந்தமாக இந்தவார அனுபவங்கள என்ன? அதில் உதவியாக இருந்ததும் இடையூறாயிருந்ததும் எவை? அவற்றின் பலன் என்ன?**